# நம்மாழ்வார் பாசுரங்களில் தொன்மம்: திருவாய் மொழியை அடிப்படையாகக் கொண்டது

கு. அனுசனா[1]

**ஆய்வுச்சுருக்கம்:**

*இந்து சமயம் சார் தொன்மையான வரலாறுகள், நிகழ்வுகள் என்பவற்றை அறிவதற்கு நாயன்மார் பாடல்களும், ஆழ்வார் பாசுரங்களும் துணைபுரிகின்றன. தொன்மம் என்பது கடவுளரையும் தேவரையும் பற்றிய கருத்தியல்கள் மட்டுமன்றி, பௌதிகம், பௌதிக அதீத சிந்தனைகள் மற்றும் சமய உண்மைகளை ஆழம் காண உதவுவது எனலாம். தென்னிந்தியாவில் பல்லவர் காலத்தில் பக்தி இயக்கத்தை முன்னெடுத்த நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் அதிகளவான தொன்மங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. சைவ சமயத்தை மீட்டெடுத்தல், இறையிருப்பைத் தெளிவுபடுத்தி விளக்குதல், சமயத்தின்பால் மக்களுக்கான ஈடுபாட்டினை அதிகரித்தல், பழமை பேணுதல், பழைய வரலாறுகளைக் கூறுவதனூடாக சமூகத்தை வளம்படுத்தல் - ஆற்றுப்படுத்தல் மற்றும் சமயப் பெரியவர்களின் வரலாறுகளை எடுத்துரைத்தல் முதலான காரணங்கள் பக்தியியக்கச் செயற்பாட்டாளர்களால் பல தொன்மக் கருத்துக்களை எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியது எனலாம். நம்மாழ்வார் அருளிச் செய்த நூல்கள் நான்காகும். இவற்றுள், திருவாய்மொழியே மிகச் சிறப்புடையதாகும். இந்நூலின் மூலம் நம்மாழ்வார் பல தொன்மம் சார் கருத்துக்களை எடுத்துரைக்க முனைந்துள்ளார். இந்த ஆய்வானது விளக்க முறை ஆய்வு மற்றும் வரலாற்றியல் ஆய்வு ஆகிய ஆய்வு முறையியல்களின் அடிப்படையில் நிகழ்த்தப்படுகின்றது. இந்த ஆய்வின் மூலம் புராண இதிகாச கதைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் தொன்மம் சார் கருத்துக்கள் மற்றும் திருமாலின் அவதாரங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் தொன்மம் சார் கருத்துக்களும், அத்துடன் திருமால் பரத்துவத்துடன் தொடர்புடைய தொன்மவியல் கருத்துக்கள் என்பனவும் ஆராயப்பட்டுள்ளன. இத்தகையதோர் பின்னணியில் நம்மாழ்வார் பாசுரங்களில் ஒன்றான திருவாய்மொழியில் இழையோடியுள்ள தொன்மம் சார் எண்ணக்கருக்களைப் பொருத்தமான சான்றாதாரங்களுடன் எடுத்துரைப்பதும், விளக்க முயல்வதுமே இவ் ஆய்வுக் கட்டுரையின் பிரயத்தனமாகும்.*

**திறவுச்சொற்கள்:** நம்மாழ்வார், தொன்மம், பாசுரம், திருவாய்மொழி, அவதாரம்

[1]*இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*anuanusana69@gmail.com*

## அறிமுகம்

தொன்மங்கள் செய்தியினை எடுத்துச் சொல்வதில் பிரதான இடத்தைப் பெறுகின்றன. புலன்கடந்த பொருளியலுண்மைகள் சமய உண்மைகள் என்பவற்றை வெளிப்படுத்துவதில் தொன்மக்கூறுகள் உதவவல்லன என்பதனை சமய வரலாற்றாய்வாளர்களும் உளவியல் அறிஞர்களும் ஒப்புக்கொள்கின்றனர். ஒரு செய்தியினை எடுத்துக்கூறி ஒருவரை நெறிப்படுத்தவும் வழிகாட்டவும் ஆலோசனை வழங்கவும் தொன்மங்களால் இயலும்.

திருமால் அடியாராய் விளங்கித் தமிழகத்தில் திருமால் நெறியைப் பரப்பிய பெரியார் பன்னிருவராவர். அப்பன்னிருவரும் ஆழ்வார்கள் என அழைக்கப்பட்டனர். செந்தமிழ்த் தெய்வப்பனுவலான நாலாயிலரத்திவ்வியப்பிரபந்தத்தை அருளிய ஆழ்வார்களுள் முதன்மையானவரும் மிகச்சிறந்தவரும் நம்மாழ்வார் ஆவார். இவரது பாசுரங்களான திருவாய்மொழி (1102 பாசுரங்கள்). திருவிருத்தம் (100 பாசுரங்கள்) திருவாசிரியம் (07 பாசுரங்கள்) பெரிய திருவந்தாதி (87 பாசுரங்கள்) என்பவையாகும். இவரது இந்த நான்கு பாசுரப்பகுதிகளும் இச்சமயத்தில் சதுர் மறைகளாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றுள் திவ்வியப்பிரபந்தத்தின் மணிமுடியாய் விளங்குவது திருவாய் மொழியாகும். மற்றைய பகுதிகளைக்காட்டிலும் இதற்கு பல உரைகள் உள்ளன. வேதாகமங்கள், இதிகாச புராணங்கள் உள்ளிட்ட வடமொழி நூற்கருத்தியல்களை மக்கள் மத்தியில் எளிமையாக எடுத்துச் சென்றவர்கள் - சொன்னவர்கள் நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆவர். நம்மாழ்வார் மாணிக்கவாசகரை ஒத்தவர். இவ்விருவருமே ஞான நெறியில் நின்றவர்கள். அகவொழுக்கத்தில் நின்று இறைவனை எண்ணி உருகுவனவே இவரின் பாடல்களில் பெரும்பான்மையானவையாகும். நம்மாழ்வார் பாடல்களிலே இறைதத்துவக் கருத்துக்கள் அதிகம் காணப்படுகின்றன. நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் பெருமளவிற்குப் புராண, இதிகாசங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் தொன்மக்கருத்துக்களே இடம்பெற்றுள்ளன. இதனை வைணவ சமயம்சார் பிரசார உத்தியாகவே கருதவியலும் இப்பின்னணியிலேயே இவ்வாய்வு நிகழ்த்தப்படுகின்றது.

## ஆய்வு முறையியல்

முறையியல் வழி அமையும் தரவுகளே துல்லியத்தன்மையுடைய முடிவுகளைத் தரவல்லவை எனும் வகையில் இவ்வாய்வு விளக்கமுறை ஆய்வு மற்றும் வரலாற்றியல் ஆய்வு ஆகிய ஆய்வு முறையியல்களின் அடிப்படையில் நிகழ்த்தப்படுகின்றது. ஆய்வு சார்ந்த விடயங்கள் ஆய்வின் தேவை கருதிப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும். பன்னிரு ஆழ்வார் வரிசையில் ஐந்தாமவராகப் போற்றப்படும் நம்மாழ்வாரின் பதிகங்கள் நான்காகக் காணப்படினும் இந்த ஆய்வில் திருவாய்மொழி, அதற்கான உரைவிளக்கங்கள் என்பன முதனிலை மூலங்களாக அமையப் பெற்றுள்ளன.

**தொன்மம்**

செய்திகளை எடுத்துச் சொல்வதில் - செல்வதில் தொன்மங்கள் பிரதானமான இடத்தைப் பெறுகின்றன. "தொன்மைத்தானே உரையோடு புணர்ந்த பழமை மேற்றே" (தொல்காப்பியச் சூத்திரம் . 1493) என்றமைந்த தொல்காப்பியச் சூத்திரத்தின் மூலம் தொன்மத்தின் தொன்மை புலப்படும். தொன்மை என்று தொல்காப்பியர் குறித்துக்காட்டும் சொல்லையே தொன்மம் எனப் பிற்காலச் சிந்தனையாளர்கள் சுட்டுகின்றனர் எனலாம். எனவே பிற்காலச் சிந்தனையாளர்களால் தொன்மம் எனும் இச்சொல் பல்வேறுபட்ட பொருள் நிலையில் எடுத்தாளப்பட்டிருப்பினும் தொல்காப்பியர் காலத்தில் புராணம் என்ற பொருளில் வழங்கியது எனலாம்.

'Myth' என்ற ஆங்கிலச் சொல் தொன்மம், பல்வேறு சொற்களில் தமிழில் வழங்கி வருகின்றது. தொன்மம் என்பது பழமை என்ற பொருளை உடையதாகும். நாட்டார் வழக்கில் இதனையே புராணம் என்ற சொல் குறிப்பிட்டிருக்கலாம். "மித்" என்ற சொல் செய்தி, மொழி, உபதேசம், வரலாறு, நிகழ்ச்சி எனும் பன்மைப் பொருள்களில் வழங்கப்பட்டு வருகின்றது. இன்றைய காலத்தில் தொன்மம் எனும் சொல் மனிதவியல், உளவியல், சமூகவியல், இலக்கியம், நாட்டுப்புறவியல், நுண்கலைகள் முதலான துறைகளில் பல்வேறு பொருள்களிலும் பல்வேறு வகையானதாகவும் ஆய்வாளர்களினால் எழுத்தாளப்படுகின்றது. (பஞ்சாங்கம், க., 2005:5)

நார்த்ராப் ஃபிரை என்பவர் சடங்கும் மனிதனின் கனவும் ஒன்றாகச் சேர்ந்த கூட்டின் வார்த்தை வெளிப்பாடே தொன்மம் என்கிறார். இவர் தொன்மம் குறித்து பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளார். தொன்மம் கடவுளர்களையோ கடவுளையொத்த மனிதர்களையோ பாத்திரங்களாக கொண்டகதை என்றும் அது வரலாற்றுக் காலத்திற்கு அப்பாற்பட்டதென்றும் இயற்கையிகந்த நிகழ்ச்சிகளைக் கொண்டதாகவும் அமைந்திருக்கும் என்றும் கூறுகின்றார். மேலும் ஜே. ஜி. பிரேசர் சூசான் லாங்கெர், பார்பீல்ட், ஜோசப் கேம்பெல் ரிச்சர்ட்ஸ் சேஸ் போன்ற அறிஞர்களும் தொன்மம் குறித்து எடுத்துரைத்துள்ளனர். (ரமணராஜா.சி., 2019:36) இந்நிலையில் தொன்மங்கள் குறித்த மேற்கூறப்பட்ட அறிஞர்களின் கருத்துக்களில் இருந்து சில அவதானிப்புக்களை பெறமுடியும். அதாவது சமயத்தின் உள்ளடக்கம் கடவுளின் பரத்துவத்தை உணர்தல் என்ற நிலையில் அது குறித்த செய்தியினை எடுத்துச்சொல்வதில் மொழிப்போதாமை காரணமாக தொன்மங்களின் இன்றியமையாமை உணரப்படுகின்றது எனலாம். தொன்மத்தில் நம்பிக்கையிழந்த எந்த நாகரிகமும் அதன் இயற்கையான வளமுடைய படைப்பாற்றலை இழந்துவிடும் என்று நீட்சே குறிப்பிடுகின்றார். (பஞ்சாங்கம், க., 2005:8)

தொன்மங்கள் தொன்மைக்காலத்தில் பல்வேறு நாடுகளிலும் சிறப்புற்று விளங்கின. தென் இந்தியாவில் பல்லவர் காலத்தில் பக்தி இயக்கத்தை முன்னெடுத்த நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் அதிகளவான தொன்மங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இவ்வகையில் பல்லவர் காலத்திலே தோன்றிய பாசுரங்களும் பதிகங்களும் ஏராளமான புராணக்கதைகளைத் தம்மகத்தே கொண்டுவிளங்குகின்றன. சிவனை முழுமுதலாகக் கொண்ட சைவத்திருமுறைகளிலும் விஷ்ணுவை முழுமுதலாகக் கொண்ட வைணவத்திலும் இத்தெய்வங்களின் பெருமைகளை, சிறப்புக்களை, வீரத்தை, அருட்திறத்தை எடுத்துரைக்கும் கதைகள் அதிகம் இடம்பெற்றுள்ளன.

இக்கதைகள் பண்டைக் காலத்தில் இருந்து வாய்மொழி மரபாகப் பேணப்பட்ட நாட்டார் கதைகளே என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இக்கதைகளை நாயன்மார்களும் ஆழ்வார்களும் எந்நோக்கத்திற்காகத் தங்கள் இலக்கியங்களிலே பயன்படுத்தினார்கள் என்பதை நோக்க வேண்டியது இன்றியமையாதது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் மக்கள் மத்தியில் வாய்மொழி மரபாகப் பேணப்பட்டு வந்த இப்புராணக் கதைகள் மூலம் மக்கள் மனதில் இறைவனின் பெருமைகளை வீரத்தை ஆவலை அவனது அருட்திறத்தை ஆழப்பதித்து அதன் மூலம் மக்களைத் தம் மதத்திற்கு இலகுவாகக் கவர்ந்திழுக்க முடியும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர் எனலாம்.

நம்மாழ்வார் பல்வேறு தொன்மங்களைத் தனது பாசுரங்களில் புகுத்தியிருப்பினும் விஷ்ணுவின் அவதாரம் குறித்த கதைகளையே அதிகம் இழையோடவிட்டிருப்பதனை அவதானிக்கலாம். பௌராணிக நூல்களிலும் இதிகாசங்களிலும் வெளிப்படுவது குறிப்பிட்ட தனிநபர்களின் வரலாறுகளாயினும் அவைகாலத்தின் தேவை கருதி மீள்நினைப்புச் செய்யப்படுவது இருந்துகொண்டேதான் இருக்கிறது. மக்களின் கூட்டுச் சிருஷ்டித் தன்மையினாலேயே இந்த மீள்நினைப்பும் மீள் வலியுறுத்தலும் நிகழ்கின்றது. இது தவிர்க்கவியலாதது. இன்றைய காலத்தில் ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு நிகழ்கின்ற அல்லது சமயம்சார் பின்னணியில் ஆலயம் கடந்து பொதுவெளியில் இடம்பெறுகின்ற கதாகாலட்சேபம், வில்லிசை, கூத்து, நாடகம் நிருத்தியம் விவாத அரங்குகள், புராணபடனம் மற்றும் கதாப்பிரசங்கம் முதலான நிகழ்வுகளில் தொன்மங்கள் அதிகம் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

**நம்மாழ்வார்**

நம்மாழ்வார் பாண்டிய நாட்டில் தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ள திருக்குருகூர் என்ற ஊரில் பிறந்தார். இவர் பரம்பரை வைணவ சமயத்தைச் சார்ந்த வேளாளர் குலத்தவர். இவரது பரம்பரையில் திருவழுதிநாடர், அறந்தாங்கியார், சக்கர பாணியார், அச்சுதர், செந்தாமரைக்கண்ணர், பொற்காரியார், காரியார் என்று எழுவர் பெயரைக் குறிப்பிட்டு, கானும் காரியார்க்கும் உடையநங்கை அம்மையார்க்கும் பிறந்தவரே நம்மாழ்வார்.

இவரது பாசுரங்களாவன திருவாய்மொழி (1102 பாசுரங்கள்), திருவிருத்தம் (100 பாசுரங்கள்), திருவாசிரியம் (07 பாசுரங்கள்), பெரிய திருவந்தாதி (87 பாசுரங்கள்) என்பவையாகும். இவரது இந்த நான்கு பாசுரப் பகுதிகளும் இச்சமயத்தவரின் சதுர்மறைகளாகக் கொள்ளப்படுகின்றன. முறையே இவை சாமவேதம், இருக்குவேதம், யசூர் வேதம், அதர்வவேதம் என்பவற்றின் சாரமாகவே அமைந்துள்ளன.

சைவ சமய நாயன்மார்களது பாடல்களில் திருஞான சம்பந்தருடைய பாடல்களை வேதசார படைப்புகளாகக் கொள்வது போல வைணவ சமயத்தில் இப் பாசுரங்கள் வேதசாரமாகக் கருதப்படுகின்றது. இப்பாசுரங்கள் யாவும் இறைவனது எல்லையற்ற ஆற்றலையும் அவற்றின்மூலம் இறைவன் உயிர்களை ஆளும் தன்மையையும் பிறவித்துயர் நீங்கி பரமபதத்தைப் பெறுவதையும் விளக்குகின்றன. அகத்துறை மரபிற்கு உரியதான மடலைப் பயன்படுத்தி பக்தி இலக்கியத்தில் தன்னை நாயகியாகவும் கண்ணனை நாயகனாகவும் கொண்டு பாடியுள்ளார்.

''பெருமாயனை அல்லாது ஒருமாதெய்வம்
மாற்றுடையாமே''

எனும் கொள்கை இவரது பாசுரங்களில் பல இடங்களிலும் இழையோடிச் செல்கின்றமையைக் காணலாம். திருவிருத்தத்தின் இறுதிப்பாசுரத்திலும் திருவாய் மொழியின் ஒவ்வொரு பத்தின் ஈற்றுப் பாசுரத்திலும் நம்மாழ்வார் பயன் கூறிச்செல்வார். ஆனால் திருவாசிரியம், திருவந்தாதி என்பன பயன்தரும் பாசுரங்கள் இன்மையால் அவற்றின் முழுமைத்தன்மை வெளிப்படுத்தப்படவில்லை. நம்மாழ்வார் மாணிக்கவாசகரை ஒத்தவர். இவ்விருவருமே ஞான நெறியில் நின்றவர்கள். அகவொழுக்கத்தில் (காதல்மார்க்கம்) நின்ற நம்மாழ்வார் இறைவனை எண்ணி உருகுவனவே இவரின் பாடல்களில் பெரும்பாலானவையாகும். நம்மாழ்வார் பாடல்களிலே இறைதத்துவ கருத்துக்கள் அதிகம் காணப்படுகின்றன.

## நம்மாழ்வார் பாசுரங்களில் தொன்மம்

தொன்மங்கள், இலக்கியங்களில் கையாளப்பட்டு வருவதனை சங்க இலக்கிய காலத்திலிருந்து உணரலாம். இதன் தொடருறு நிலையாக எழுந்து பிற்கால இலக்கியங்களிலும் தொன்மங்கள் பிரதான இடத்தைப் பெற்றிருக்கின்றன. இந்திய மொழிகளிலுள்ள இலக்கியங்களில் பெரும்பாலனவை இராமயணம், மகாபாரதம் எனும் இதிகாசங்களின் தாக்கத்திற்கு உட்பட்டவை. அது போன்ற பௌராணிக மரபின் செல்வாக்கினையும் பிற்கால இலக்கியங்களில் காணவியலும். நாயன்மார்கள், ஆழ்வார்களின் பக்திப்பாடல்களில் தொன்மங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நாயன்மார்களின் பாடல்களில் சிவனின் திருவிளையாடல்கள் குறித்த கதைகளையும் ஆழ்வார் பாசுரங்களில் திருமாலின் அவதாரங்கள் குறித்த கதைகளையும் பதிவுகளாகக் காணலாம்.

## திருமாலின் அவதாரக் கதைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் தொன்மங்கள்

திருமாலின் அவதாரங்களில் மேன்மையானதாகவும் மக்கள் மத்தியில் பரவலாகப் பயின்று வந்ததுமான இராம அவதாரக்கதைகள் நம்மாழ்வார் திருவாய்மொழியில் அதிகம் இடம் பெற்றுள்ளன. திருமால் இராமனாகப் பிறந்து வளர்ந்து அவன் செய்த வீரதீரச் செயல்கள், தெய்விகச் செயல்கள் முதலானவற்றை எடுத்துப் பாடுவதில் நம்மாழ்வார் மிகுந்த திருப்தி அடைந்துள்ளார் எனலாம். மனித வாழ்வின் உன்னத நன்மைகளைப் புலப்படுத்த திருமால் இராமனாக அவதாரம் செய்து இப்பூமியில் நிகழ்த்திய சாதனைகள் பலவற்றையும் நம்மாழ்வார் விதந்து பாடியுள்ளார். இராமாயணத்தின் அடிப்படையில் ஆழ்வர்களின் பாசுரங்களை நோக்கும் பொழுது தாடகை வதம் தொடக்கம் இராவணவதம் வரை பல்வேறு நிகழ்ச்சிகளையும் ஆழ்வார்கள் தொகுத்து பாடியுள்ளனர். திருமால் இப்பூமியிலே பிறந்து ‘‘துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம்’’ செய்வதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தார் என்பதை வலியுறுத்துவதோடு வைணவத்தின் பலத்தை நம்மாழ்வார் வெளிப்படுத்தினர் எனலாம். தன்னிகரில்லாத தலைவனாக மனித உருத்தாங்கிய திருமால் உலகியலோடு ஒன்றி தெய்வீக வாழ்வு வாழ்ந்த நிகழ்ச்சிகளை நினைவு கூறுவது ஆழ்வார்களுக்கு சமயத் தேவையாகவும் சமூகத்தேவையாகவும் அமைந்திருக்கலாம். பல்லவர் காலத்தில் சமண, பௌத்த மக்களுக்கு எதிராக வைணவத்தை நிலைநிறுத்த விரும்பிய ஆழ்வார்கள் இத்தகைய கதைகளைப் பரப்புவதில் அதிக ஆர்வம் காட்டினர் போலும். வைணவ மதத்தின் மிகப்பிரதான கோட்படாகக் கருதப்படும் அவதாரக்கோட்பாடு ஆழ்வார்களுக்கு இக்கதைகளை முன்னெடுக்க பக்கபலமாக அமைந்திருந்தது.

பக்தனொருவன் வருந்தி இறைஞ்சும் போது திருமால் அவ்விடத்திற்கு வந்து துணைபுரிவார் என்ற நம்பிக்கையை வலுப்படுத்த இத்தொன்மக்கதைகளை வைணவ ஆழ்வார்கள் பயன்படுத்தினர் எனலாம். இராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், நரசிங்க அவதாரம், வாமன அவதாரம் முதலிய அவதாரங்களைச் சற்று அதிகமாகவே நம்மாழ்வார் பாடியுள்ளார். வைணவத்தின் சிறப்பினை மாத்திரம் புலப்படுத்த இக்கதைகளை குறிப்பிட்டுள்ளார். வைணவத்தின் பெருமைகளை மாத்திரமின்றி அக்காலச் சமயப்பிரச்சினைகளுக்கு அச்சுறுத்தலாகவும் இவை அமையுமெனக் கருதியிருக்கலாம்.

### அவதாரம்

உலகில் தீயவற்றை அழிப்பது நல்லவற்றை காப்பது அறத்தை நிலைநிறுத்துவது என்ற மூன்று அடிப்படையில் அமையும் அவதாரம் நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும் இறைவனால் நிகழ்த்தப்படும் ஒன்று என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும். ‘‘நல்லவர்களை காக்கவும் தீயவர்களை அழிக்கவும் அறத்தை நிலை நிறுத்தவும் நான் யுகம்தோறும் அவதரிக்கின்றேன்’’ என்று கண்ணன் கீதையில் குறிப்பிடுவது இவ்விடத்திலே குறிப்பிடத்தக்கது.

மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், பலராமன், இராமன், கிருஷ்ணன், கல்கி என்னும் பத்துமே இவற்றுள் அடங்குகின்றன. மச்சம், வராகம், கூர்மம் என்ற இந்த அவதாரங்களும் விளங்கின. அடிப்படையில் தோன்றி மக்களைக் காப்பாற்றிய செய்தியைக் குறிப்பிடுகின்றன. நரசிம்ம அவதாரம் இறைவன் எங்கும் நிறைந்திருப்பான் என்பதை அறிவுறுத்துகின்றது. வாமன அவதாரம் முழுமையான மனித வடிவம் கொண்ட தோற்றத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

அவதாரக்கதைகளை ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் முதன்மைப்படுத்துவதற்கான காரணங்களை நோக்கின் முன்னைய காலங்களில் இருந்த இவ்வாறான அவதாரக்கதைகள் மக்கள் மத்தியில் நாட்டார் கதைகளாகச் செவிவழியாக வழங்கி வந்திருக்கலாம் என ஊகிக்க கூடியதாய் உள்ளது. திருமாலின் பெருமையையும் தேவையையும் உணர்ந்த ஆழ்வார்கள் அக்கதைகளைத் தங்கள் பாசுரங்களிலே பயன்படுத்தி அவற்றை மேலும் மக்கள் மயப்படுத்த முனைந்திருக்கக்கூடும்.

நம்மாழ்வாரை அதிகமாக ஈர்த்துள்ள அவதாரங்களை நோக்கும் பொழுது கண்ணன் அவதாரம் முதன்மையாகவும் அதற்கடுத்த நிலையில் வாமன அவதாரமும் இராம அவதாரமும் அதிக எண்ணிக்கையில் பாடப்பெற்றுள்ளன. இம்மூன்று அவதாரங்களும் அதிக எண்ணிக்கையில் பாடப் பெறுவதற்கு அவை மனித உருவில் அமைந்திருந்தமையும் ஒரு காரணமாகலாம். கண்ணன் அவதாரம் மிக அதிகமாக இடம்பெற்றதற்கு அவனது மண்ணுலகம் சார்ந்த செயற்பாடுகளும் காரணமாய் அமைந்திருக்கலாம்.

நம்மாழ்வார் பாசுரங்களில் திருமாலின் ஒரு சில குறிப்பிட்ட கதை நிகழ்வுகள் ஆழ்வாரின் கவனத்தை ஈர்த்துள்ளன. இரணியனின் மார்பை பிழக்கும் நிகழ்ச்சி, வாமனன் உலகை அளந்த நிகழ்வு, கண்ணன் உலகை உண்டல், பூதனை அழித்தல், குவலயா பீடத்தின் கொம்பொடித்தல் ஆகிய நிகழ்வுகள் ஆழ்வாரைப் பெரிதும் கவர்ந்துள்ளன. இராம அவதாரத்தில் இராவணனை அழித்த நிகழ்வும் அதிகம் பாடப்பட்டுள்ளன.

**கண்ணன் அவதாரம்**

நம்மாழ்வார் பாசுரங்களில் கண்ணன் அவதாரம் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. புராணங்கள் இதிகாசங்கள் என்பவை கண்ணன் அவதாரத்தைச் சிறப்பித்துப் பேசுகின்றன. நம்மாழ்வார் பாடல்களிற் கண்ணன் தொடர்பான அதிகமான நிகழ்ச்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. வெண்ணெய் திருடல், பூதனை அழித்தல், குவாலயாபீட யானையைக் கொல்லல், பகாசுரனை அழித்தல், சகடாசுரனை அழித்தல், கம்சனைக் கொல்லல், கேசி பாணாசுரன் ஆகிய அசுரர்களை அழித்தல், கோவர்ததன கிரி மலையைக் குடையாகப் பிடித்தல் போன்ற பல நிகழ்ச்சிகளை குறிப்பிட்டுள்ளார்.

''மத்துறு கடைவெண்ணெய் களவினில்

உரவிடையாப்புண்டு எத்திறம் உரலினொடு'' (தாமோதானார், கு., 1981:222)

என்பதில் கூறப்பெறும் நீர்மை ஆழ்வாரை ஆறுமாதம் மோகித்து கிடக்கும்படி செய்தது என்பர். குழந்தைக் கண்ணனின் விரத்தையம் வலிமையையும் விளக்கும் பல நிகழ்ச்சிகளையும் அங்கங்கே எடுத்து அமைத்து பாடுகின்றார். தாயாக வந்த பேயைப் பாலுறிஞ்சி உயிர் மாய்த்தது, சகடம் உதைத்தது, குருத்தொசித்தது, நாகம் காய்ந்தது, விளவுக்கு கன்றெறிந்தது முதலியனவும் குறிக்கப்பெறுகின்றன. இவற்றுள் பொய்மைத் தாயின் நிலை உணர்ந்து அவளை மாய்த்த தெளிவும் வெண்ணெய் களவு செய்து உண்டதற்காகத் தாய் கோல் கொண்டு மிரட்டக் கண்களில் நீர் மல்கப் பதுங்கி நின்ற நிலையும் ஆகியவற்றை ஒரு படத்தில் தீட்டினாற் போன்று ஆழ்வார் கவியமைக்கும் அழகு அருமையாக உள்ளது. அக்காட்சிகள் தன் உள்ளத்தை உருக்குவதாகப் பாடி நம் உள்ளத்தையும் உருக வைக்கின்றார் அவர்.

''பெய்யும் பூங்குழல் பேய் முலையுண்ட பிள்ளைத் தோற்றமும்

பேர்ந்து ஓர் சாடு இறச் செய்ய பாதம் ஒன்றால்.........''

(தாமோதரனார், கு., 1981:223)

''பேய் முலையுண்ட பிள்ளைத்தேற்றம்''

என்று குறித்தது போன்றே வேறு ஒரு இடத்தில்

''பேய்ச்சி விட நஞ்ச முலை சுவைத்த

மிகு ஞானச் சிறு குழவி''

என்று அக்குழந்தையை – அதன் அறிவை வியந்து போற்றுகின்றார்.

மலையெடுத்து மாரி தடுத்து மாடுகளைக் காத்த செயலை

''மலையை எடுத்துக் கல் மாரி காத்துப் பசுநிரைத்தன்னைத்

தொலைவு தவித்தபிரான்'' (தாமோதரனார், கு., 1981:223)

கல்மாரி ஆகையால் கல்மலையெடுத்துக் காத்தான் போலும் எனக் கருதுமாறு அமைகின்ற பாடல்.

உஷை என்ற பெண்ணிற்கு உதவ வாணனுடன் போரிட்டு அவன் ஆயிரம் தோள் துணித்த கதையும் இவர்க்கு வாய்ப்பாக அமைகின்றது. பெருவிடாய்ப் பட்டு உன்னை என்று கொல் சேர்வது என்று பேசுகையில்அவனை

''உள் வன்மை தீர ஓராயிரம் தோள்துணித்த

புள்வல்லாய்''

என்று விளக்கின்றார்.

கண்ணன் மேன்மையும் சீர்மையும் விளங்குமாறு ஏழுலகுண்டு ஆவிலையைச் சேர்ந்தது. கீதையருளியது, பார்த்தனுக்கு பாசுபதம் பெற அருளியது, தாள்பால் இடம் அளித்தது இன்னபிற செய்திகளை அங்காங்கே அமைத்துப் பாடுகின்றார்.

"தீர்த்தன் உலகளந்த சேவடிமேல் பூந்தாமம் சிவன் முடி மேல்
தான்கண்டு பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை
போர்த்தும் ஒருவரால் பேசக்கிடந்ததே" (தாமோதரனார், கு., 1981:224)

என்று ஆழ்வாரால் பேசப்பட்டுள்ளது.

**இராமவதாரம்**

இராமாயணம், மகாபாரதம் இரண்டும் மக்கள் மத்தியில் வாய்மொழி மரபுக்கதைகளாகவே நிலவி வந்துள்ளன என்பது பெரும்பாலான அறிஞர்களின் முடிவாகும். இராமனும் கண்ணனும் இன்றும் மக்கள் மத்தியில் நிலையான வணக்கத்திற்குரியவர்களாகவே விளங்கி வருகின்றனர். ஏனைய அவதாரங்கள் தோன்றி மறைந்து விட்டன. ஆனால் இராமன் கண்ணன் அவதாரங்கள் இன்னும் நிலையாக இருப்பதற்கு இதுவும் ஓர் காரணமாக இருந்திருக்கலாம். கம்பராமாயணத்திற்கு முன்னர் சங்க இலக்கியங்களில் இராமாயணக் குறிப்புகள் இருந்தாலும் இராமனின் வரலாற்றை முழுமையாகப் படைத்தவர்கள் ஆழ்வார்களேயாவர்.

நம்மாழ்வார் தனது பாசுரங்களில் இராமனை ஒப்பற்ற தலைவனாகவும் சிறந்ததொரு வீரனாகவும் காட்டியுள்ளனர். அத்துடன் அவனது தெய்வீகத் தன்மையையும் அருட்சிறப்பையும் சிறப்பாகப் புலப்படுத்தியுள்ளார். திருவாய்மொழியில் முப்பத்து ஒன்பது இடங்களில் இராமசரிதம் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன.

"கற்பார் இராமபிரானையன்றி மற்றும் கற்பரோ" (தாமோதரனார்,கு., 1981:225)

என்பது ஆழ்வார் வாக்கு. மானிடமாக வந்த அவதாரம் மூன்றில் இராமவதாரம் முழுத்தன்மை உடையது எனக்குறிப்பிடுகிறார். இராமனுடைய வீரமும் ஆண்மைச் செயலும் இங்கு பரக்க போற்றப் பெறுகின்றன. இலங்கை எரியூட்டியது, அதன் இறையையும் அரக்கர் குலத்தையும் நீறாகுமாறு அம்பு தொட்டது, மராமரம் ஏழுருவ ஒரு வாளி கோத்தது, அரக்கியை மூக்கு ஈர்ந்தது, அம்பு தொட்டது, மாசினமாலி மாலிமான் என்பவர்படக் கனன்றது. இவை முதன்மையாகக் கூறப்பெறுபவை இவற்றைத்தவிர தம்பிக்கு இலங்கை அருளியது பற்றி குறிப்பிடும் பொழுது,

"……… மீண்டும் அவன் தம்பிக்கே விரி நீர் இலங்கை அருளி
ஆண்டு, தன் சோதி புக்க அமரர் அரியேற்றினையே?

தசரதற்கு மகனானதைக்குறிப்பிடுகையில்

"………தயரதன் பெற்ற மரகத மணித்தடத்தினையே"

என்றும் இராமன் மந்தரையின் மீது சிறுவயதில் வில்லால் எய்ததைக் குறிப்பதை

"........கூனே சிதைய உண்டைவில்

நிறத்தில் தெறித்தாய்; கோவிந்தா! ........" (திரு.மொழி, 1-5-5)

இப்பாடல் மூலம் எடுத்துரைக்கின்றார்.

மேலும் இராமன் இராவணனது மதிலை அழித்து மகிழ்ந்தான் என்பதனை

"... மாறில் போரரக்கன் மதில் நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகன்......."

என்ற பாடல் வரி மூலம் புலப்படுத்துகின்றார். இராமனது ஆற்றல் சிறப்பு பலபடியாக அவனது வில்லாற்றலை எடுத்து விளக்குவதாக காணப்படுகின்றது.

"...... தென் இலங்கை எரி எழச் உருவ செற்ற வில்லியை...." (திரு.மொழி, 3-6-2).

".. மராமரம் பைந்தாள் ஏழ் உருவ ஒருவாளி கோத்த வில்லா!..." (திரு.மொழி, 2-6-9).

".... கணை ஒன்றாலே ஏழ் மரமும் எய்த எம் கார் முகிலைப்......." (திரு.மொழி, 9-1-2)

எனப்பாடுகின்றார்.

**வாமனன் அவதாரம்**

முழுமையானதொரு மனித வடிவம் பெற்ற அவதாரமே வாமன அவதாரமாகும். வாமனன் என்ற சொல் குறுகியவன் என்ற பொருளைத்தரும்.திருமால் குட்டையான வாமன அவதாரம் கொண்டு மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி நிலம் கேட்ட செய்தியே இவ்வவதாரத்தில் குறிப்பிடப்படுகின்றது. திருமால் குறுமுனி வடிவங்கொண்டு அசுரனை அழித்து உலகினைக் காத்த செய்தி சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. ஆழ்வார்கள் பல பெயர்களில் இதனைப் பாடியுள்ளனர். வாமனன், குறளன், குட்டன், மாணி, மானிக்குறளன் என்றும் பல சொற்களால் குறிப்பிட்டுள்ளனர்.

வாமனவடிவின் அழகு பற்றியும் அக்கால்களின் திறன் பற்றியும் செயலின் தன்மை குறித்தும் வசிட்டன், சண்டாளன் என்ற வேறுபாடின்றி உலகத்து அனைவர் தலையிலும் அடியிட்ட சீலம் குறித்தும் நம்மாழ்வார் பாடியுள்ளார்.

"...... இவ்வுலகம் மூன்றும் உடன் நிறைய

சிறுமா மேனி நிமிர்த்த என் செந்தாமரைக்கண்

திருக்குறளன்......" (திரு.மொழி, 8-10-3)

என்றும்,

"திருமா நீள் கழல் ஏழுலகும் தொழ

ஒருமாணிக் குறளாகி நிமிர்ந்த அக்கருமாணிக்கம்" (திரு.மொழி, 1-10-1)

என்றும் வரும் தொடர்களில் அழகு பற்றி அறியமுடிகிறது. வாமனன் அடிகளை நம்மாழ்வார் குறிப்பிடும் இடத்து,

"பெருநிலம் கடந்த நல்லடில் போது" ( திரு.மொழி, 1-3-10)

''மண் விண் முழுது மளந்த ஒண் தாமரை'' (திரு.மொழி, 8-6-7) என்றும் பாராட்டுகின்றார். வாமனனது செயலைக் குறிப்பிடுகையில்,

''மாய அம்மன்'' (திரு.மொழி, 6-9-2)

''வன்கள்வன்'' (திரு.மொழி, 6-1-11)

''ஞாலம் கொள்வான் குறருவாகிய வஞ்சனே'' (திரு.மொழி, 3-8-2)

''மதியினால் குறள் மானாய் உலகிரந்த கள்வற்கு (திரு.மொழி, 1-4-3) என்று அதன் மாயத்தன்மை காட்டப்பெற்றுள்ளது.

மற்றும் எல்லார்க்கும் எல்லாமும் வழங்கும் அருளாளனாகிய அவன் யாசிக்க அறியாது யாசகம் கேட்ட முறைமையும் அவன் கால்கள் கிடைத்தவற்றை விரைவுடன் வாரிக்கொண்ட திறத்தையும் கவிதை நலம் சிறக்கப் பாடுகின்றார் ஆழ்வார்.

''… அறியாமைக் குறள் ஆய், நிலம் மாவலி மூவடி என்று
அறியாமை வஞ்சித்தாய்…''

என்றும்

''… குன்றேழ் பாரேழ் சூழ் கடல் ஞாலம் முழு ஏழும்
நின்றே தாவிய நீள்கழல் அழித்திருமால்'' (திரு.மொழி, 8-3-8)

என்றும் ஈரடிச்செயலை இரண்டிரண்டு அடிகளால் அமைத்தலினின்று அறியலாம். அதனை எண்ணி எண்ணிக் கரைகின்றார் என்பது தெளிவு.

''அடியை மூன்றை இரந்தவாறும் அங்கே நின்ற ஆழ்கடலும்
மண்ணும் விண்ணும் முடிய ஈரடியால் முடித்துக்கொண்ட

முக்கியமும் நொடியுமாறவை கேட்குந்தோறும் என் நெஞ்சம்
நின் தனக்கே கரைந்துகும்'' (திரு.மொழி 5-10-9)

என்ற வரிகள் அச்செயலைப் பிறர் உறக் கேட்குந்தோறும் ஆழ்வார் உள்ளம் உருகிக் கரைந்தது என்பதற்குச் சிறந்த சான்றாகும்.

**நரசிங்க அவதாரம்**

மனித உடலும் சிங்கத்தலையும் கொண்ட அவதார வடிவமே நரசிம்ம அவதாரமாகும். இறைவன் எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கும் தன்மையை இவ் அவதாரம் உணர்த்துகின்றது. வலிமை சான்ற கொடிய இரணியனது அகத்தைத் தன் கூரிய நகங்களாற் பிளந்து அவனுடைய மகன் பிரகலாதற்கு அருளிய செய்கையை ஆழ்வார் பதின்னாங்கு இடங்களில் பாடுகின்றார். தந்தையின் பால் சீற்றம், தனயன் பால் அன்பு இரண்டும் ஒரு சேர அமைந்த தன்மையை இவ்வாறு பாடுகின்றார்.

''ஒரு மூர்த்தியாய்ச் சீற்றத்தோடு அருள் பெற்றவன்
அடிக் கீழ்புக நின்ற செங்கண்மால்'' (திரு.மொழி, 3-6-6)

சீற்றத்தோடு இருக்கையில் அருள் பெற்றவன் பிரகலாதன். அவன் தன் அடிக்கீழ் புகுமாறு நின்றவன் செங்கண்மால் என்கின்றார். எங்குமுள்ள கண்ணன் என்றன் மகன். அன்பன் சொல் பொய்யாகாமலும் வரம் பெற்றவன் வரத்திற்கு மாறின்றியும் அந்த பொழுதில் நகத்தால் இரணியன் அகம் பிளந்து அவன் மகனுக்கு அருளினான். அத்தகையது அவன் சீர்மை என்று வியக்கின்றார். அவனை இவ்வாறு கொன்றது சரியா? என வாதிடும் வல்லார்க்கு உண்மை அறிவிப்பது போன்று,

''என் நெஞ்சத்துள்ளிருந்து இருந்ததமிழ் நூல் இவை மொழிந்து
வன் நெஞ்சத் திரணியனை மார்விடந்த வாட்டற்றான்'' (திரு.மொழி, 10-6-4)

என்கின்றார்.

அவனது வன்நெஞ்சம், அன்பு நெஞ்சம் அவனுக்கு இருப்பிடமாகின்றது. அன்னோர்க்கு அவன் அருள் தானாக வருகின்றது என்பது கருத்து மற்றும் ''உன்னைச் சிந்தனையினால் இகழ்ந்த இரணியன் அகல் மார்வம் கீண்ட என் முன்னைக் கோளரியே!....'' என்று பாடுகின்றார்.

**வராக அவதாரம்**

வராகம் எனப்படுவது பன்றியாகும். நீரில் மூழ்கியிருந்த நிலவுலகை மீட்க திருமால் பன்றி வடிவம் கொண்டு மீட்ட செய்தி குறிப்பிடப்படுகின்றது. நம்மாழ்வார் தனது பாசுரத்தில் ஏனம், பன்றி, கேழல், வராகம், ஆதி வராகம் என்னும் சொற்களிலே பாடியுள்ளார். நெடுங்காலம் இப்பூவுலகு நீரில் மூழ்கிக்கிடந்தமையால், நிலமகள் வேண்டத் திருமால் வராகமாய் வந்தமை, பூவுலகை நீரில் இருந்து மீட்டமை, நிலமகளைச் சேர்ந்தமை முதலிய நிகழ்வுகளை வைத்து ஆழ்வார்கள் இவ்வவதாரத்தைப் பாடியுள்ளனர். உலகை இடந்து எடுத்துத் தன்கோட்டில் கொண்டு நின்ற கேழலின் காட்சியைக் கடைசித் திருவாய்மொழியில்,

''கோலவராக மொன்றாய் நிலம் கோட்டிடைக் கொண்ட
எந்தாய்'' (திரு.மொழி, 10-10-7)

என்று பாடுகின்றார்.

வராகமாய்க் கொணர்ந்த நிலமகளை அவன் மணந்து கொண்டதாக கூறுவதுண்டு. தன் காதலியைப் பெறவே அவன் கேழலியச் சென்று நிலத்தினை அண்ட பத்தியினின்று மீட்டு வந்தான்.

''நின் திரு எயிற்றில் இடந்து நீ கொண்ட நிலமகள் கேள்வனே''
(திரு.மொழி, 7-2-9)

என்று கூறுவதாகப் பாடுகின்றார். தனக்காக மட்டுமன்று. அச்செயல் செய்தது. உலக நன்மையின் பொருட்டு என்ற கருத்து புலப்பட

''பெருநிலம் எடுத்த பேராளனே'' (திரு.மொழி 8-1-2) என்று பாடுகின்றார்.

உன்பால் வேண்டிக் கொள்ளாத நிலத்தைச் சென்று மீட்டு வந்தாய், ''காணுமாறு அருளாய்'' என்று நான் கலங்கிக் கேட்கவும் எனக்கு அப்பேறு கிட்டாதா என்ற கருத்தும் அப்பாடலில் அமைந்துள்ளது. கேழலின் செயல் பற்றி வருமிடங்கள் பதினொன்று உள்ளன.

**வேறுஅவதாரங்கள்**

மேற்குறித்த ஐந்து அவதாரங்கள் தவிர ஆழ்வார் பெயரளவில் குறிப்பிடும் மற்ற அவதாரங்கள் ஆமை, மீன், மா(ஹயக்ரீவன்) என்ற மூன்றுமாம். ''கற்கியாம் இன்மை கார் வண்ணனே'' (திரு.மொழி, 5-1-10) என்பதனால் இனி வருகின்றதாகக் கூறப்பெறும் அவதாரமும் அவரால் குறிக்கப் பெறுகின்றது. கண்ணனைப் பற்றி பேசுகையில் ''இராமன் உவர்த்தலே'' (திரு.மொழி, 10-3-10) இராமனுடன் நீ விரும்பிச் செல்லுதலில்லை என்று கூறுகையில் பலராமன் குறிக்கப்பெறுகின்றான். மற்றும் பரசுராமன் ''இருபத்தொரு தலைமுறை சூரியகுல மன்னர்களை அழித்த வீரச்செயலைக்கூறி இருப்பதோர்கால் அரசுகளை வென்றி நீள் மழுவா'' (திரு.மொழி, 6-2-10) என்று அவனைப் புகழ்வதையும் காணுகின்றோம்.

**அலைகடல் கடைந்தது**

திருமால் பாற்கடலைக் கடைந்த நிகழ்ச்சியை நம்மாழ்வார் பதினைந்து இடங்களில் குறிப்பிட்டுப் பாடுகின்றார். ஆனால் ஒரு இடத்திலேனும் பாற்கடல் என்று குறிக்கவில்லை. ''ஆழ்கடலைக் கடைந்த அப்பனே ''(திரு.மொழி 8-1-1) ''குரை கடல் கடைந்த கோல மாணிக்கம் '' (திரு.மொழி, 8-4-4) என்ற தொடர்களால் அவன் வலிமையையும் அச்செயலால் அவன் பெற்ற ஏற்றத்தையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.கடல் கடைந்தது அமரர் பொருட்டே என்றும், அரவம் பிணைத்துக் குன்று நாட்டி, அச்செயல் செய்யப்பெற்றதையும் குறிக்கின்றார். அமுதம் பெற்றது அதன் சிறப்பு அதனை நயம் தோன்ற ''அலைகடல் கடைந்த ஆரமுதே'' (திரு.மொழி, 7-2-5) என்று கடல் கடைந்தது அமுது தந்த அரிய அமுது என்று பாடுகின்றார். தான் தாழ நிற்பதை அவன் பெருமையாகக் கருதுவான். அதனால்தான் ''அமரர்க்கு அமுதீந்த ஆயர் கொழுந்து '' (திரு.மொழி, 1-7-9) என்றும் போற்றியுரைக்கின்றார் ஆழ்வார்.

**ஆனைஇடர்கடிந்தது**

கஜேந்திரன் என்னும் யானைக்கு உதவப் பரம பதத்தினின்று திருமால் ஓடிவந்து அதனை முதலை வாயினின்றும் காத்து , யானை முதலை ஆகிய இரண்டிற்கும் காட்சி தந்தார். அவற்றிற்கு நற்பேறு நல்கினன் என்பது பலகாலும் கூறப்பெறும் கதை .இதனைப் படிப்பவர் கண்முன் இக்காட்சி தோன்றுமாறு ஆழ்வார் விளக்கமாக அமைக்கின்றார். எட்டு இடங்களில் இது பற்றிய வருணனை வருகின்றது. சோலையிலமைந்த பொய்கையின் இயல்பும் அவதிப்படும் யானை தும்பிக்கை தூக்கி நிற்கும் தன்மையும் அருள் செய்வதற்கு கார்முகில்

இயல்பினன், வண்ணத்தன் என்ற பண்பும் புலப்படுமாறு அமைகின்றது. பாடல் ‘‘மொய்ம்மாம் பூம்பொழில் - பொய்கை முதலைச் சிறைப்பட்டு நின்ற கைம்மாவுக்கு அருள் செய்த கார்முகில் போல் வண்ணன், கண்ணன்…’’ (திரு.மொழி,3-5-1).

களிற்றுக்கு அருள் செய்தற்குப் பரம பதத்தினுன்று அரைகுலையத் தலைகுனிய விரைந்து ஓடி வந்தான் என்றும் வந்துதன் ஆடையை வாயில் ஒற்றித் துன்புற்ற யானைக்கு வேது தந்தான் என்றும் புராணிகர்கள் பேசுவதுண்டு. தான் இருந்த இடத்தே இருந்து கொண்டே தான் தன் சங்கல்பத்தால் - ஞானமே படையாக யானையைக் காத்திருக்க முடியாதா? ஓடிவருவானேன்? என்ற கேள்வி எழுகின்றது. அதற்குரிய விடையை ஆழ்வார்பாடல் தருகின்றது என்று காஞ்சிபுரம் மகாவித்வான் அண்ணங்கராச்சாரியார் எடுத்து காட்டுவது சாலவும் பொருத்தமுடையதாக உள்ளது. பாடல்களில்

‘‘தொழுங்காதல் களிறு அளிப்பான்’’ (திரு.மொழி, 3-1-9)

என்றும்

‘‘தன் நீள் கழல் ஏத்திய ஆனையின் நெஞ்சிடர் தீர்த்தபிரான்’’ (திரு.மொழி, 7-10-8)

என்றும் வருகின்றது.

ஆனையின் விருப்பம் யாது? அதன் இடர் யாது? இடர்முதலை வாய்ப்பட்டது அதனால் அது உயிர் இழக்க நேருமல்லவா? அதுவே இடர் என்றாலும் இங்கு யானை அடைந்த இடர் அதினும் இன்னும் பெரியது. அது ‘‘தொழும் காதல் களிறு’’ ஆதலின் தான் பறித்த மலர்களை இறைவன் அடியிணையில் இடமுடியவில்லையே என்று தன் விருப்பம் நிறைவேறுமையால் யானை பேரிடர் உற்றது. அந்த இடர் நீங்க வேண்டுமென்றால் அதற்காக அவன் அங்கு வந்து தானே ஆகவேண்டும் . அவ்யானையின் காதல் நிறைவேற்றுவதற்காகவே இறைவன் அங்கு ஓடி வந்தான். அவன் பரமபதத்திலேயே தங்கி விட்டால் இது கூடாதன்றோ? முதலை வாயினின்று மீட்டல் வேண்டுமானால் வேறு வகையிலும் இயன்றிருக்கலாம். அப்படி அவன் வராதிருந்தால் அது ‘‘இறைவன் பக்தர்களுக்காகவே உள்ளான்’’ என்ற அவன் பண்புக்கு இழுக்காதலும் கூடும். அவ்விழுக்கு நேராதவாறு அவன் நடந்து கொண்டான். இதைத்தான் ஆழ்வார்

‘‘மழுங்காத ஞானமே படையாக மலர் உலகில்  
தொழும் பாயார்க்கு அளித்தால், உன் அடர்ச்சோதி  
மறையாதே?’’ (திரு.மொழி,3-1-9)

என்ற வினாவின் மூலம் காட்டுகின்றார். இக்கருத்தை இராமானுயரும் தம் பகவத்கீதை உரையில் அழகுற அமைந்துள்ளார் என்று காட்டுவர். இது இன்பமளிப்பதாயுள்ளது. இச்சிறப்பு நோக்கியே ஆழ்வாரும் அவனைப் ‘‘பூந்தண் புனல் பொய்கை யானை இடர் கடிந்த என் தனி நாயகன்’’ (திரு.மொழி 2-8-2) என்று பராட்டி ஒப்பற்ற தலைமையை அவனுக்கு அளிக்கின்றார்.

**மற்றைய கதைகள்**

மார்க்கண்டேயனுக்கு அருளியது பற்றி மூன்று இடங்களில் வருகின்றது. நாம் சிவபிரானே மார்க்கண்டேயனைக் காப்பாற்றியதாகப் பல காலும் கேட்டிருக்கின்றோம். ஆழ்வாரும் அதனை கேட்டிருக்கின்றார் போலும் அதனால்

''புக்கடிமையினால் தன்னைக் கண்ட மொர்க்கண்டேயன் அவனை, நக்க பிரானும் அன்று

உய்யக் கொண்டது நாராயணன் அருளே......'' (திரு.மொழி, 4-10-8)

என்று முடிகின்றார். நாராயணன் அருளாலேயே சிவபெருமானால் அதனைச் செய்யமுடிந்தது என்பது அவர் கருத்து.

சிவபெருமான் திரிபுரம் எரிந்த செயலையும் ஆழ்வார் குறிப்பிடுகின்றார். மற்ற தெய்வங்கள் யாவற்றிற்கும் கூடத்திருமாலே அந்தர் யாமியாக இருப்பதாக அவர் கொள்வதால் திரிபுரம் எரிந்ததுவும் திருமாலின் செயலே என்று பராட்டுகின்றார். அதனை ''வெள்ள நீர்ச் சடையானும் நின்னிடை வேறலாமை விளங்க நின்றதும்...'' (திரு.மொழி, 5-10) என்றும் விளக்கி உரைப்பர். வேறு இடங்களில் சிவபெருமானைக் குறிக்கையில், ''நுண்ணுணர்வின் நீல் ஆர் சண்டத்து அம்மான்'' (திரு.மொழி, 6-10-8) என்றும் ''மாகத்து இளமதியம் சேரும் சடையானைப் பாகத்து வைத்தான்'' (திரு.மொழி, 10-4-06) என்றும் நீலகண்டம் பெற்றமை, இளமதியம் உற்றமை இரண்டையும் குறிப்பிடுவார். தன் அடி சேர்ந்த இளமதியத்திற்குச் சிவபெருமான் முடியில் இடமளித்தான்: அவன் தன்னை நினைக்க அவனுக்குத் தன் வலப்பாகத்தில் இடமளித்தான் பரமன் என்பது ஆழ்வார் எண்ணம். அதனால் தான் ''வலத்தனன் திரிபுரமெரித்தவன்'' (திரு.மொழி, 1-3-9) என்று பாடுகின்றார்.

''மாபாவம் விட அரற்கு பிச்சை பெய்கோபால கோளரி ஏறு'' (திரு.மொழி, 2-2-2)

அரனது பாவம் பிரமனது தலையை அறுத்ததால் வந்தது. அப்பாவம் நீங்க, அவன் கையில் இருந்த பிரமனது கபாலம் நீங்க அரன் பிச்சையிட்டதாகக் கதை. அதுவே இங்கு குறிக்கப்பெறுவது, இதனையே பின்னர் அர்ச்சையில் நாராயணனது பரத்துவம் பேசுகையில்

''பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும்
நாயகன் அவனே; கபாலறன் மோக்கத்துக்கண்டு கொள்மின்''
(திரு.மொழி, 4-10-4)

என்று கபால மோஷம் திருமாலின் தலைமையை நிலைநாட்டும் என்று பாடுகின்றார்.

தத்துவக் கருத்தை கூறுகையில் அதனைப் படிப்பவர் மனதில் நன்கு பதியச்செய்வதற்கு ஆழ்வார் புராணக் கதைக்குறிப்புக்களைப் பயன்படுத்தும் முறைமையை நோக்கலாம். இவ்வுலகம் முழுவதும் இறைவனுடைய செல்வம் என்பது ஒரு உண்மை. அதனை வரட்சியான கருத்தாகக் கூறாமல் இறைவனைப் பிரிந்து ஆற்றாமையால் வருந்தும்

ஒரு தலைவியின் பேச்சில் அக்கருத்துப் புலப்படுமாறு அமைக்கப்பெறுகின்றது. இவ்வுலகத்துப் பலபொருள்களையும் பார்த்து அவள் அவற்றை அவனோடு தொடர்புடையனவாகக் கருதுகின்றாள் என்கின்றார். மண்ணைக் கையாள் துழாவி பார்த்து, ''இது வாமனன் மண்'' என்கின்றார்களாம். செல்கின்ற ஆனிளங் கன்றுகளைப் பார்த்து அவற்றைத் தழுவிக் கொண்டு ''இவை கோவிந்தன் மேய்த்தன'' என்கின்றார்களாம். ஆய்ச்சியர்பால் வெண்ணெய் கண்டால் ''ஈது அவனுண்ட வெண்ணெய்'' என்கின்றார்களாம். அழகுடைய பலவண்ண வடிவங்களை கண்டால் ஒருசார் ஒப்புமை கருதி ''உலகளந்தான்'' என்று கூறிக்கொண்டு குதூகலத்துடன் துள்ளுகின்றார்களாம். பெரும்புலத்தில் ஆநிரைகள் மேய்தல் கண்டால் அங்கு கண்ணபிரான் இருப்பான் என்று அவற்றின் பின் செல்கின்றார்களாம்.

ஆழ்வார் தனிக்கதைகளையன்றி வேறுவேறு கதைகளை ஒருசேர இணைத்து அழகுறப்பாடுவதையும் காண்கின்றோம். குன்ற மேந்திக்குளிர் மழைக்காத்தும் அன்று ஞாலம் அளந்ததும் ஒன்றாக வருகின்றன. மீண்டும் ஆநிரை காத்ததும் உலகம் தாவியதும் ஒன்று சேருகின்றன. இலங்கை சென்றதும் குறளுருவானதும் கூடியமைகின்றன. இரணியன் மார்விடந்ததும் பாண்டவர்க்காகப் படை தொட்டதும் அவ்வாறே மாமரம் ஏழுருவ ஒரு அம்பு கோத்ததும் மாமிரண்டின் நடுவே போனதும் ஒரு பாடலில் இடம் பெறுகின்றன. இவ்வாறு இறைவன் பல அவதாரங்களில் செய்த பல செயல்களைச் சொல்லிச்சொல்லி, அவன் பண்புகளை நினைந்து நினைந்து அனுபவித்து இன்பம் கண்டார் கவிஞர் என்பது அறியப்பாலது. அக்கதைகளும் பாடல்களில் அமைந்து அவற்றை வளமுடையனவாகவும் நயம் நிறைந்தனவாகவும் ஆக்குகின்றன என்பது தெளிவு. அச்சுவை கருதியே ஆழ்வாரும் தம்பாடல்களைத் ''தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்'' என்பாராயினர் போலும்.

எனவே சமூகத்தில் தெய்விக ஆற்றலை உருவாக்கும் மொழியாகத் தொன்மங்களை நம்மாழ்வார் பயன்படுத்தியுள்ளார். நம்மாழ்வார் குறித்த கதைக்கருவை மட்டும் கொண்டு ஒரு இலக்கியத்தை உருவாக்காது புராணங்களையும் இதிகாசங்களையும் பழைய கதைகளையும் பயன்படுத்தி தான் சார்ந்திருந்த பக்தி இயக்கச் சிந்தனைகளைத் தனது பாசுரங்களின் மூலம் சமூகப்படுத்தியுள்ளார். கவிதையை புனைபவன் கவிஞன். கவிஞனுக்குத் தொன்மம் இன்றியமையாதது. ஏனெனில் அவனுக்கும் வாசகனுக்கும் பொதுவான ஒரு கூறாக விளங்கி அவர்களது உணர்வுகள் ஒன்றித்துவிடும்படி அது உதவுகிறது. எனவே, சிறந்த கவிஞனாக விளங்கிய நம்மாழ்வார் தனது பாசுரங்களில் தொன்மங்களை அதிகம் பயன்படுத்தியிருப் பதுடன் பக்திசார் கருத்துப் பரம்பல் செய்யும் நோக்கங்களுக்காகவே அதனைக் கையாண்டுள்ளார் எனவும் துணியலாம்.

## உசாத்துணை

கமலக்கண்ணன்,வ., (2001), நாலாயிர திவ்வியப் பிரபந்தம் மூலமும் விளக்கவுரையும், தொகுதி – ஏழு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

சிவலிங்கம் சிவநிர்த்தானந்தா, (2006), திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களில் காணப்படும் நாட்டார் மரபுகள், தமிழ்த்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

சீனிவாசராகவன், அ., (1994), நம்மாழ்வார், சாகித்திய அக்கதெமி,

தாமோதரனார், கு., (1981), திருவாய் மொழித்திறன், பாரிநிலையம் - பிராட்வே, சென்னை.

பஞ்சாங்கம், க., (2005), தொன்மத்திறனாய்வு, அன்னம் - அகரம் வெளியீட்டகம்.

மாருதிதாசன், (2011), நாளும் ஒரு நாலாயிரம், நர்மதாபதிப்பகம், சென்னை.

ரமணராஜா, சி., (2019), “திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் தொன்மம் : நான்காம் திருமுறையை அடிப்படையாகக் கொண்டது”, மெய்ப்பொருள், இந்துப்பண்பாட்டுக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.